வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 16 of 20 21

வழக்கு சாட்சி - PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செந்தில் பிரபு | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : | பாலசுந்தரம் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 16.02.2026.

(எதிரி ஆஜர். ).

**முதல் விசாரணை** :

1) நான் தற்போது ஈரோடு மாவட்டம் ஈரோடு வடக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.03.2018 ஆம் தேதி பல்லடம் காவல் நிலையத்தில் உதவி காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது பல்லடம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் மயில்சாமி என்பவர் பல்லடம் காவல் நிலைய குற்ற எண் 189/2018 பரிவுகள் 279,337,304(A) இதசவில் முதல் தகவல் அறிக்கை பெற்று. 11.03.2018 ஆம் தேதி தேதி காலை 7.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான கோவை - பல்லடம் செல்லும்ரோட்டில் உள்ள காளிவேளம்பட்டி அருகில் உள்ள நெல்லை பேக்கரி' அருகில் அமைந்துள்ள சம்பவ இடத்தை சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி தயார் செய்தேன். அந்த மாதிரி வரைப்படம் **அ.த.சா.ஆ.4** ஆகும். பின்னர் சம்பத்தில் காயம்பெற்ற திருமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். பின்னர் சம்பவத்தின் நேரடி சாட்சியான சண்முசுந்தரம் மற்றும் கண்ணுற்ற சாட்சியான யுவராஜ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2) பின்னர் கோவை அரசு மருத்துவமனை சென்று காலை 9.30 மணிக்கு சவகிடங்கின் முன் இறந்துபோன பழனிச்சாமி பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்பு பிரேத விசாரனை செய்து அறிக்கை தயார் செய்தேன் அந்த பிரேத விசாரனை அறிக்கை **அ.த.சா.ஆ. 5** ஆகும். பிரேதத்தினை இறப்பின் காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தினை 1897 தலைமை காவலர் ஸ்டால்பின் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைத்தேன். பிரேத விசாரணை சாட்சிகள், வசந்தாமணி, வென்னிலா, சரண்யா, தினேஷ்பாபு , அவநாசியப்பன், ராஜேந்திரன், தினேஷ்குமார் ஆகியோரை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரனை முடித்துமேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) எனது புலன் விசாரணையில் திருமூர்த்தியிடம் வாக்குமூலம் பெற்றுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததை நான் அறிந்துக்கொண்டேனா என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தை எந்த காவலர் பதிவு செய்தார் எத்தனை மணிக்கு பதிவு செய்தார் என்ற விவரம் வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்ததாக சொல்லப்படும் மறுநாள் 11.03.2018 காலை 6.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் புகார் வாக்குமூலத்தில் பெறப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது காவல் நிலையத்தில் பெறப்பட்டதா அல்லது வாக்குமூலம் நேரத்தில் பெறப்பட்டதா என்றால் கோவை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று அங்கு திருமூர்த்தி என்பவரிடம் இருந்து

கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் பல்லடம் வந்து 6.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. எனது புலன் விசாரணையில் கோவை அரசு மருத்துவமனையில் இருந்து எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் 6.10 மணிக்கு கோவை அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைத்தது.

2) தகவல் கிடைத்த பிறகுதான் சிறப்பு உதவி ஆய்வாளர் வாக்குமூலம் பெறுவதற்கு சென்றாரா என்றால் கோவை அரசு மருத்துவமனையில் தகவல் கிடைத்து அப்போதே திருமூர்த்தி என்பவருக்கு இறந்துபோன தகவல் கிடைத்துவிட்டது. வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது விபத்து நடந்த நாள் பதிவு செய்யப்பட்டதா அல்லது அதற்கு மறுநாள் பதிவு செய்யப்பட்டதா என்றால் மறுநாள் பதிவு செய்யப்பட்டது. விபத்து நடந்த தேதி அன்றோ பல்லடம் அரசு மருத்துவமனையில் இருந்தோ அல்லது கோவை அரசு மருத்துவமனையில் இருந்தோ எந்த விதமான தகவலும் பல்லடம் காவல் நிலையத்திற்கு கிடைக்கவில்லை என்றால் சரியல்ல.

3) பல்லடம் காவல் நிலையத்தில விபத்து நடந்ததாக சொல்லப்படும் நாளில் முதல் உதவி சிகிச்சை அளித்ததற்காக விபத்து பதிவேட்டில் வாகனத்தின் எந்த விதமான அடிப்படை பதிவுகளும் மேலும் அந்த விபத்தானது கொங்கு திருமண மண்டபத்திற்கு அருகில் நடைபெற்றது என்றால் விபத்து பதிவேட்டில் பொதுவாக சம்பவ இடத்தை தான் குறிப்பிடுவார்கள். வாகனங்களின் பதிவுகளை குறிப்பிடமாட்டார்கள். நான் பதிவு செய்த பார்வை மகசரில் கொங்கு திருமண மண்டபத்தை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பார்வை மகசர் வரைப்படத்தில் கிழ மேல் ரோட்டின் விபத்தானது தென்புறம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

முதல் தகவல் அறிக்கையில் வாகனத்தின் பின் புறம் மோதியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும்போது வாகனத்தின் எதிர் திசையில் விபத்து நடந்ததாக பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருமூர்த்தி என்பவரின் வாக்குமூலத்தை நான் எந்த தேதியில் விசாரித்தேன் பதிவு செய்தேன் என்றால் 11.03.2018 அன்று. எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் கோவை அரசு மருத்துவமனை கல்லூரியில் வைத்து விசாரித்தேன். நான் முறையாக சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றாலும் சரியாக பார்வை மகசர் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.02.16 18:38:40 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.